# ‘கூட்டாட்சியையும் கூட்டணி ஆட்சியையும் குழப்பிக் கொள்ள வேண்டாம்!’

## கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா எம்.பி. பேட்டி!

**சென்னை, மார்ச் 28 -**

**கூட்டாட்சியையும் கூட்டணி ஆட்சியையும் குழப்பிக்கொள்ள வேண்டாம் என கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. ‘தினமலர்’ தேர்தல் களம் இதழுக்கு அளித்துள்ள சிறப்புப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

**இது குறித்து அவர் அளித்த பேட்டி வருமாறு:**

**கேள்வி:** *தொகுதி பங்கீட்டில் காங்கிரஸ்முரண்டுபிடித்தபோது. டில்லியை மையமாக வைத்து அரசியல் செய்யும் நீங்கள் தான் அதை சரிசெய்தீர்களா?*

**பதில்:** தி.மு.க., தொகுதி பங்கீடு பேச்சுக்குழுவும், காங்கிரஸ் தொகுதி பங்கீடு பேச்சுக்குழுவும் பேசியதை, முதல்வர் ஸ்டாலினிடம் தெரிவித்தோம். அவர் தான் தலையிட்டு தீர்வு காண்பதற்குரிய முடிவை சொல்லி சரிசெய்தார்.

**கேள்வி:** *டில்லியில், காங்கிரசை விட பா.ஜ.,வில் தான் உங்களுக்கு அதிக நண்பர்கள் என்கின்றனர். உண்மையா?*

**என் வீட்டு விருந்தில் அனைத்துக் கட்சியினரும் பங்கேற்பர்!**

**பதில்:** என்னைப் பற்றி முழுமையாக புரிந்துகொள்ளத் தெரியாதவர்கள் அப்படி சொல்லியிருப்பர். என் வீட்டில் நடக்கும் விசேஷ நிகழ்ச்சியின் விருந்தில், காங்கிரஸ், பா.ஜ.. சமாஜ்வாதி, திரிணாமுல் காங்கிரஸ், ஆம் ஆத்மி என சர்வ கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்று சிறப்பிப்பர். சர்வ கட்சி தலைவர்கள் வந்து செல்லும் வீடு; நட்பு தொடரும் வீடு என, வட மாநில தலைவர்கள் அழைப்பர். முன்னாள் துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கர், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், நட்டா, கார்கே, ராகுல் மற்றும் முன்னாள் ஒன்றிய அமைச்சர்கள், மாநில முதல்வர்கள் எல்லாம், எங்கள் வீட்டில் தயார் செய்யப்படும் தென் மாநில உணவுகளை விரும்பி சாப்பிடுவர்.

நட்டாவுக்கு, இட்லி சாம்பார் ரொம்ப பிடிக்கும். என் மகள் திருமண வரவேற்பு நிகழ்ச்சி விருந்தில், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்றுள்ளார். எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தும்போது, நாங்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து, விரும்பி சாப்பிடுவோம். அதில் பத்திரிகையாளர்களும் பங்கேற்று, அரசியல் பற்றி விவாதிப்போம்.

**கேள்வி:** *மத்தியில் கூட்டாட்சியை வலியுறுத்தும் தி.மு.க., மாநிலத்தில் கூட்டணி கட்சிகளை ஆட்சியில் சேர்க்க மறுக்கிறது. இது போலித்தனம் இல்லையா?*

**பதில்:** கூட்டாட்சி வேறு: கூட்டணி ஆட்சி வேறு. “மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி’ என்பது தி.மு.க.,வின் கொள்கை. கூட்டாட்சி தத்துவம் என்பது, மாநில அரசுகளும் மத்திய அரசும் இணைந்து நடத்துகிற ஆட்சி முடிவு. கூட்டாட்சியையும் கூட்டணி ஆட்சியையும் குழப்பிக் கொள்ள வேண்டாம்.

**கேள்வி:** *தி.மு.க, ஆட்சி ஹிந்து விரோத ஆட்சி என்று பிரதமரும், அமித் ஷாவும் பிரச்சாரம் செய்து வருகின்றனர். ஆனால், அதற்கு தி.மு.க., தரப்பில் சரியான பதில் இல்லையே..*

**பதில்:** தமிழகத்தில் தி.மு.க., ஆட்சி அமைந்ததும், 10,000 கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. ஹிந்துக்களின் திருவிழாக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. பழங்கால கோவில்கள் புனரமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளன. ஒருகால பூஜை நடக்கும் கோவில்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. அர்ச்சகர்களுக்கு உதவித்தொகை தரப்படுகிறது. அனைத்து ஹிந்து மக்களும் தி.மு.க., அரசை பாராட்டி வருகின்றனர். எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் நிறை. சாதி, மதம் பேதமற்ற சமத்துவ சமுதாயம் தி.மு.க., ஆட்சியில் உருவாக்கப் பட்டுள்ளது.

**கேள்வி:** *கடைசியாக லோக்சபா தேர்தலில், எப்போது போட்டியிட்டீர்கள்? அதன்பின் ஏன் போட்டியிடவில்லை?*

**கலைஞரும் முதல்வர் மு.க.ஸ்டாலினும் தந்த பதவி!**

**பதில்:** கடந்த 1996ம் ஆண்டு லோக்சபா தேர்தலில், புதுக்கோட்டையில் போட்டியிட்டு வெற்றிப் பெற்றேன். அதன்பின் நடந்த தேர்தலில் நான் போட்டியிடவில்லை. ராஜ்யசபா எம்.பி. பதவி வேண்டும் என, எதுவும் நான் கேட்டதில்லை. கலைஞரும், முதல்வர் ஸ்டாலினும் நான் கேட்காமல் கொடுத்தனர்.

**கேள்வி:** *இதோடு, ஆறாவது முறையாக பார்லிமென்டில் பதவி கிடைத்திருக்கிறது. அந்த பதவியை பயன்படுத்தி, தமிழகத்திற்காக நீங்கள் செய்த மூன்று முக்கிய விஷயங்கள் எவை?*



**பதில்:** சேலத்தில், நலிந்து போன மேக்னசைட் தொழிற்சாலையை ஒன்றிய அரசு தனியாரிடம் கொடுக்க முயன்றபோது, அதை தடுத்து நிறுத்தி 80 கோடி ரூபாய் லாபம் கிடைக்கும் வகையில், தொழிற்சாலை தொடர்ந்து இயங்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொண்டேன். தொழிலாளர்களின் ஊதிய உயர்வை அதிகரித்து தருவதற்கு குரல் கொடுத்தேன். தமிழகத்தில் முதல் முறையாக, திருச்சி ரயில் நிலையத்தில், ஒரு கோடி ரூபாயில், ‘எஸ்கலேட்டர் அமைத்து கொடுக்கப்பட்டது. திருக்குறளை தேசிய நூலாக்க குரல் கொடுத்தேன், உலகத்தில் உள்ள தொன்மையான இடங்களின் வரிசையில், கல்லணையை கொண்டு வர பரிந்துரைத்தேன். கலைஞர் கொண்டு வந்த திருநங்கையருக்கான திட்டம், இந்தியா முழுதும் பயனளிக்கும் வகையில், தனிநபர் மசோதாவாக, திருநங்கையர் மசோதா, பார்லிமென்டில் நிறை வேற்றப்பட்டது. நரிக்குறவர்களுக்கு மலைவாழ் மக்கள் அந்தஸ்து வழங்க வேண்டும் என குரல் கொடுத்தேன்.

**கேள்வி:** *ரயில்வே திட்டங்கள் மற்றும் விமான நிலைய திட்டங்களில், மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது, தமிழகம் பின்தங்கி வருகிறது. இதை சரிசெய்ய ஏதேனும் முயற்சி எடுத்துள்ளீர்களா?*

**பதில்:** தமிழகத்தில் உள்ள விமான நிலையங்களை, சர்வதேச விமான நிலையங்களாக மேம்படுத்த வேண்டும். பல்வேறு மாவட்டங்களுக்கு ரயில்வே திட்டங்களை கொண்டு வர, முதல்வர் ஸ்டாலின் சொல்லி, தி.மு.க., எம்.பி.,க்கள் அனைவரும் ஒன்றிய அமைச்சர்களிடம் முறையிட்டோம். எங்களது ஒருமித்த குரல் ஓயவில்லை. தொடர்ந்து குரல் கொடுப்போம்.

**வெளிப்படைத்தன்மை இல்லை!**

**பஹல்காம் போரை நான் தான் நிறுத்தினேன் என டிரம்ப் பேசியது உட்பட பல விவகாரங்களில், ஒன்றிய அரசிடம் வெளிப்படைத்தன்மை இல்லை. அதேசமயம், ஒன்றிய அரசின் வெளியுறவு கொள்கையை நான் விமர்சிக்கவில்லை.**

**கேள்வி**: *ரேபரேலியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையை விரைவில் செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என ராஜ்யசபாவில் பேசிய நீங்கள், மதுரை எய்ம்ஸ் குறித்து எதுவுமே பேசாதது ஏன்?*

**பதில்:** கேள்வி நேரம், விவாதத்தின் போது, மற்ற மாநிலத்தில் எய்ம்ஸ் திட்டங்கள் வேகமாக நிறைவேறும் போது, தமிழகத்தில் ஏன் இன்னும் வேகம் பெறவில்லை என பேசியிருக்கிறேன். கடந்த 2013ல் அறிவிக்கப்பட்ட திட்டம், இன்னும் முழுமை பெறாமல் இருப்பது, தமிழக மக்களின் நலன்கள் மீது ஒன்றிய அரசின் அக்கறையின்மையை காட்டுகிறது என்பதையும் சுட்டிக்காட்டி இருக்கிறேன். தமிழகத்தில் மெட்ரோ ரயில் திட்டம் நிறைவேற, பொறுப்புள்ள எதிர்க் கட்சியாக, நியாயமான முறையில் குரல் கொடுத்துள்ளோம். எந்நாளும் தமிழக மக்களின் நலனுக்காகவும் உரிமைக்காகவும் குரல் கொடுக்க தவறியதில்லை.

**கேள்வி:** *எதிர்க்கட்சிகள், பார்லிமென்டை நடத்த விடாமல் தொடர்ந்து இடையூறு செய்வதை, பார்லிமென்ட் மூத்த அரசியல்வாதியான நீங்கள் கண்டிக்காமல், ஆதரித்தும் பேசியுள்ளீர்கள். ஏன்?*

**பதில்:** பார்லிமென்டை நடத்தவிடாமல் இடையூறு செய்வதாக வெளியேத் தவறாக சித்தரிக்கப்படுகிறது. நாங்கள் ஒரு பிரச்சினை குறித்து, குறிப்பாக மணிப்பூர் கலவரம் மற்றும் மாநில உரிமைகள் பறிக்கப்படும் போது, எதிர்க்கட்சிகள் பேசினால் அதை அனுமதிக்க வேண்டும்; அனுமதி மறுக்கப்படுகிறது. அரசு பதில் சொல்ல முன்வரவில்லை என்றால், விளக்கம் தரவில்லை என்றால். பார்லிமென்டில் விவாதிப்பதற்கு வழி இல்லை. அதை எதிர்த்து, ஜனநாயக முறையில் குரல் கொடுத்தால், ஆர்ப்பாட்டம் செய்வதாகக் கருதி, அவையை ஒத்திவைத்து, பழியை எங்கள் மீது போடுவதால் வெளியே உள்ளவர்கள் எங்களை தவறாக நினைப்பது வாடிக்கையாகி விட்டது.

**கேள்வி:** *ஒன்றியத்தில் இருந்து நிதி தரவில்லை, வரவில்லை. என தமிழக அரசு தொடர்ந்து புலம்புகிறது. இது தொடர்பாக, தமிழக அரசு சார்பில், நீங்கள் எந்த அமைச்சரிடமாவது பேசியதுண்டா? அவர்கள் சொல்வதென்ன?*

**பதில்:** புலம்பவில்லை; ஆதங்கப்படுகிறோம். முறையிடுகிறோம். முதல்வர் சொல்லி அனுப்பும் கோரிக்கை குறித்து, ஒன்றிய நிதி அமைச்சரை அடிக்கடி சந்தித்து வலியுறுத்தியுள்ளோம். ரயில்வே அமைச்சர், வெளியுறவுத்துறை அமைச்சரை, சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பலமுறை சந்தித்து, தமிழக நலன் சார்ந்த கோரிக்கைகளை நிறைவேற்றி தரும்படி கேட்டிருக்கிறோம்.

**கேள்வி:** *தமிழக அரசின் கடன், 10 லட்சம் கோடி ரூபாயை தாண்டியிருப்பது குறித்து டில்லியில் என்ன பேசிக்கொள்கின்றனர்?*

**மோடி அரசின் கடன் ரூ.214.82 லட்சம் கோடி!**

**பதில்:** பத்து லட்சம் கோடி ரூபாய் என்பது உண்மையல்ல. கடன் தொகை, 9.29 லட்சம் கோடி ரூபாய் தான். மாநில அரசின் மொத்த நிகர வருமானத்தில் 26.12 சதவீதம். கடன் வாங்கிக் கொள்வதற்குரிய வரம்பை, தி.மு.க., அரசு தாண்டவில்லை. ஆனால், மன்மோகன் சிங் பிரதமராக இருந்த போது, இந்தியாவின் கடன் தொகை, 85.87 லட்சம் கோடி ரூபாய். இன்று, பிரதமர் மோடி அரசின் கடன், 214.82 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது. இந்த வித்தியாசம் யார் கண்ணிற்கும் ஏன் தெரியவில்லை.

**கேள்வி:** *வெளியுறவு கொள்கையில் ஒன்றிய அரசின் செயல்பாடு எப்படி உள்ளது?*

**பதில்:** பஹல்காம் போரை நான் தான் நிறுத்தினேன் என டிரம்ப் பேசியது உட்பட பல விவகாரங்களில், ஒன்றிய அரசிடம் வெளிப்படைத்தன்மை இல்லை. திருப்தி தரும் வகையிலும் இல்லை. அதேசமயம் கொள்கையை நான் விமர்சிக்கவில்லை. வெளியுறவு கொள்கை தொடர்பாக, பார்லிமென்டில் எதிர்க்கட்சி கேட்கும் கேள்விகளுக்கு ஒன்றிய அரசு உரிய பதிலளிக்கவில்லை.

**சாதி மதத்திற்கு அப்பாற்பட்டவன்!**

**கேள்வி:** *தி.மு.க.வில் கொள்கை பரப்பு செயலர் பதவியிலிருந்து, துணைப் பொதுச்செயலர் பதவிக்கு உயர்த்தப்பட்டுள்ளீர்கள். இது உங்களுக்கு சாதிய பின்புலத்தால் மட்டுமே கிடைத்தது என்று தி.மு.க.விலேயே சிலர் விமர்சிக்கின்றனரே.*

**பதில்:** நிச்சயமாக இல்லை. சாதியை நான் முன்னிலைப் படுத்தியதில்லை. பல ஆண்டுகளாக நான் பழகுபவர்களின் சாதி என்ன என்பதும் எனக்கு தெரியாது. அவர்களிடம் என் சாதி குறித்து சொன்னதும் கிடையாது. யாருடைய சாதியையும் தெரிந்துகொள்ள நான் முற்பட்டதில்லை. சாதி அரசியல் எனக்கு தெரியாது. கட்சிக்கு கடினமாக உழைத்தது. தியாகம் செய்தது. தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் எனக்கு கிடைத்த அங்கீகாரம் தான் கட்சியின் துணை பொதுச்செயலர் பதவி. மற்றபடி சாதி பின்புலத்தில் எனக்கு பதவி தரவில்லை. அப்படி விம ர்சிப்பவர்கள் குறித்து நான் கவலைப்படுவதும் இல்லை. என்னை புரிந்தவர்களுக்கு, என்னைப் பற்றி நன்றாக தெரியும். நான் சாதி, மதத்திற்கு அப்பாற்பட்டவன்.

இவ்வாறு திருச்சி சிவா எம்.பி. பேட்டியளித்திருந்தார்.

நன்றி : **‘தினமலர்’** 26.03.2026

---

# தி.மு.க. கூட்டணிக்கு விடுதலைப் பறவைகள் கட்சி ஆதரவு!

*சென்னை, மார்ச் 28 -*

*தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு விடுதலைப் பறவைகள் கட்சி ஆதரவு தெரிவிப்பதோடு, தி.மு.க. கூட்டணிக்காக அயராது பாடுபடுவோம் என்றும், விடுதலை பறவைக் கட்சி நிறுவனத் தலைவர் டெல்லி ராஜா அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-*

*வேண்டும்! வேண்டும்! மீண்டும் மீண்டும்!*

*திராவிடமடல் பொற்கால ஆட்சி, வருகிற தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.க. தலைமையில் மதசார்பற்ற கூட்டணி கட்சிகள் மாபெரும் அமோக வெற்றி பெற்று 234/234 சரித்திர சாதனை பெற்றிடும் என்பது உறுதி செய்யப் பட்டுள்ளது.*

*தி.மு.க. கூட்டணி கட்சிகள் வெற்றிக்காக விடுதலை பறவை கட்சி அயராது பாடுபடும்.*

*இவ்வாறு நிறுவனத் தலைவர் டெல்லி ராஜா அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி நிறுவனத்தின் மூலம் எம்.ஆர்.ஐ இயந்திரம் அமைக்க சுமார் 1.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கட்டிட பணிகளை மாநிலங்களவை உறுப்பினரும், நிதி நிறுவனத்தின் தலைவருமான சு.கல்யாணசுந்தரம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார், பின்னர் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள பார்வையாளர்கள் உணவு விடுதி சிலிண்டர் தட்டுப்பாட்டால் மூடப்பட்டிருப்பதை முற்றுகையிட போவதாக கூறிய பொதுமக்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி உணவு விடுதி திறக்க உரிய ஏற்பாடு செய்தார். உடன் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மேயர் க.சரவணன், பொதுக்குழு உறுப்பினர் இரா.அசோக்குமார், மாநகர துணைச் செயலாளர் எஸ்.ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. முகாம் அலுவலகத்தில் தருமபுரி தி.மு.க. மேற்கு மாவட்டச் செயலாளர், முனைவர் பெ.பழனியப்பன் தலைமையில் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல் குறித்து மாவட்ட சார்பு அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2026 தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைக்க ஆற்றவேண்டிய கழக பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

---

## த.மா.கா. தாமரைச் சின்னத்தில் போட்டியிடுவது ஏன்?

# என்.டி.ஏ. கூட்டணிக்கு தலைமை அ.தி.மு.க. வா? பா.ஜ.க.வா?

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு - பழனிசாமிக்கு காட்டமான கேள்வி!

*சென்னை, மார்ச் 28 -*

*தி.மு.க. ஆட்சியில்தான் சென்னைக்கு ஏராளமான வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக பெருமிதம் தெரிவித்த அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டம் ஒழுங்கு பற்றி பேச எடப்பாடி பழனிசாமிக்கு எந்த தகுதியும் இல்லை என விமர்சித்தார்.*

*சென்னை எழும்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பா.ஜ.க. பிரித்து கொடுத்த தொகுதி பங்கீட்டை, அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் வாசித்து விட்டு நேரடியாக பா.ஜ.க. போட்டியிடும் மயிலாப்பூரில் பிரச்சாரத்தை எடப்பாடி பழனிச்சாமி தொடங்கியதாக விமர்சித்தார். தமிழ்நாட்டில் என்.டி.ஏ. கூட்டணிக்கு தலைமை தாங்குவது அ.தி.மு.க.வா? பா.ஜ.க.வா? என கேள்வி எழுப்பினார். தனது தலைமையில் தான் கூட்டணி என பேசி வரும் எடப்பாடி பழனிசாமியால், த.மா.கா. தாமரை சின்ன த்தில் போட்டியிடுவது ஏன்? என்பதற்கு பதில் அளிக்க முடியுமா என வினவினார்.*



**சென்னைக்கு ஏராளமான திட்டங்கள்!**

*தி.மு.க. ஆட்சியில்தான் சென்னைக்கு ஏராளமான வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் மழை, வெள்ளத்தின்போது மக்களை நேரில் சந்திக்காத பழனிசாமி, கொரோனா காலத்தில் கூட வெளியே வராமல் ஓடி ஒளிந்து கொண்டதாக விமர்சித்தார்.*

*கொரோனா தொற்றிலிருந்து தமிழ்நாட்டை மீட்டவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என பெருமிதம் தெரிவித்த அமைச்சர் சேகர்பாபு, தி.மு.க. ஆட்சியில்தான் சென்னைக்கு ஏராளமான வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்ற ப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.*

**சட்டம் - ஒழுங்கு பற்றி பேச தகுதியில்லாதவர்!**

*பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமையை யாரும் மறந்துவிடவில்லை. வரும் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. படுதோல்வி அடையும். மக்களின் அமோக ஆதரவுடன் ‘திராவிட மாடல்’ அரசு ஆட்சியமைக்கும் சட்டம் ஒழுங்கு பற்றி பேச எடப்பாடி பழனிசாமிக்கு எந்த தகுதியும் இல்லை என கூறிய அமைச்சர் சேகர்பாபு, முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் அரங்கேறிய பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமையை யாரும் மறந்துவிடவில்லை என்று தெரிவித்தார். தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவத்தை பழனிசாமி மறந்துவிட்டாரா? என்றும் அவர் வினவினார்.*

*2026 சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. படுதோல்வி அடையும் என திட்ட வட்டமாக கூறிய அமைச்சர் சேகர்பாபு, மக்களின் பேராதரவுடன் திராவிட மாடல் அரசு வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியமைக்கும் என உறுதிபட தெரிவித்தார்.*



கும்பகோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 20வது வார்டு அமமுக செயலாளர் ஏழுமலை, பாட்டாளி மக்கள் கட்சி இளைஞர் அணி மாநகர செயலாளர் ஹரிகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் 60 பேர் மற்றும் விளந்தகண்டம் அ.தி.மு.க. ஊராட்சி செயலாளர் தமீம்அன்சாரி, விளந்தகண்டம் அ.தி.மு.க. கிளைச்செயலாளர் சேக்அலாவுதீன், சோழபுரம் பேரூராட்சி 11வது அ.தி.மு.க. செயலாளர் முகமது சபீர், ஆகியோர் தலைமையில் 11 பேர் என மொத்தம் 71 பேர் அந்தக்கட்சியில் இருந்து விலகி, தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் தங்களை தி.மு.கவில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வின் போது மாநகர செயலாளர் சு.ப. தமிழழகன், கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெ.சுதாகர், பகுதி செயலாளர் இரா.கல்யாணசுந்தரம், மண்டல குழு தலைவர் மனோகரன், தி.மு.க. மாநகர சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் தங்கராஜ், சோழபுரம் பேரூராட்சி செயலாளர் ஜபரூதீன், பேரூராட்சி துணை செயலாளர் செல்வமணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.